தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு	மலர்,
௫	௨௲௧௰, ௨௲௰௧ சித்தார்த்தி மார்கழி, தை 1979 டிசம்பர் 1980 ஜனவரி, பிப்ரவரி	௯; ௧0

'ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமா?

ஏ. ஆதித்தன்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-21.

தொல்காப்பியனார் வினைத்தொகையினை அறுவகைத் தொகைகளில் ஒன்றெனக் கூறி அதன் பண்பினையும் எச்சவியலின்கண்ணே குறிப்பிடுகின்றார்.

வினையின் தொகையே பண்பின் தொகையே ... ...
(தொல். சொல். 412)

வினையின் தொகுதி காலத்தியலும் (தொல். சொல். 413)

வினைத்தொகைக்குச் சான்றுகளாக 'ஆடரங்கு', 'செய்குன்று' போன்றனவற்றைச் சுட்டி, காலத்தியலுமென பொதுவகையாற் கூறியவதனான் மூன்று காலமும் கொள்க என்றும் தொகுதி காலத்தியலுமெனவே, அவ்வினை பிரிந்து நின்றவழித் தோன்றுது தொக்க வழித் தொகையாற்றலாற் காலந்தோன்றுமென்றவாறும் என்றும் குறிப்பிடுவர் உரையாசிரியர்கள்.

செய் குன்று — வினைத்தொகை செய்த குன்று — பெயரெச்சம்

ஈண்டு வினைத்தொகை எனும் அமைப்பில் காலம் தொக்கு வருகின்றது; அதுபோல் அதனது எச்ச ஈறும் தொக்கு வருகின்றது

இதன் பொருட்டு பிற்கால இலக்கண நூலாராகிய பவணந்தி முனிவர் வினைத்தொகையினைக் 'காலங்கரந்த பெயரெச்சம்' எனக் குறிப்பிடுகின்றார்.

செய்த குன்று

செய் - வினையடி த் - இறந்தகால இடைநிலை அ - பெயரெச்ச விகுதி

'செய் குன்று' எனும் அமைப்பில் காலப்பொருண்மையினைப் பற்றிய குறிப்பு வெளிப்படையாக இன்மையால் இவ்வமைப்பினை

முக்காலத்திற்குரியதாகக் கூறமுடியும். ஆனால் இது தொடரில் செயலாற்றும்போது ஒரு குறிப்பிட்ட காலத்தை உணர்த்தும் வடிவமாகவே செயலாற்றுகின்றது. வினைத்தொகை என்ற அமைப்பின் முதற்பகுதியில் காலத்தை குறிக்கும் பகுதியும் எச்சப் பொருண்மையினைக் குறிக்கும் பகுதியும் இல்லை. இவ்விரண்டு பகுதிகளும் தொக்கு வந்து இவ்வமைப்பு முக்காலத்திற்கும் பொருந்துவனபோல அமைந்து காணப்படுகின்றது.

இனி ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச அமைப்பினைக் காணலாம். தமிழில் எதிர்மறைப் பெயரெச்சங்கள் 'செய்யா' என்னும் இருவகை வாய்பாடுகளில் வழங்கிவருகின்றன. சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையும் 'செய்யா' அமைப்பே பயின்று வருகின்றது. இச் 'செய்யா' அமைப்பினையே இலக்கணக்காரர்கள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமெனக் குறிக்கின்றனர்.

வரலாற்றுநிலையில் 'செய்யா' 'செய்யாத' என்ற இருவமைப்புக்களையும் ஆய்ந்து பார்க்கின் 'செய்யா' அமைப்பே முந்தையது என்று கருத இடமுள்ளது. இலக்கிய வழக்காற்றில் 'செய்யா' அமைப்பே பண்டை இலக்கியங்களில்பெரும்பான்மையாகப் பயின்று வருகின்றது. 1 பிற்கால இலக்கியங்களில் 'செய்யா' அமைப்பின் வருகைஅருகியும் 'செய்யாத' அமைப்பின் வருகைபெருகியும்காணப் படுகின்றன. 'செய்யாத' அமைப்பு 'செய்த' என்னும் உடன்பாட்டுப் பெயரெச்சத்தின் ஒப்புமையாக்கத்தால் பிற்காலத்தில் உருவாக்கப் பட்ட அமைப்பே என்று சில மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அவ்வாறாயின் 'செய்யா' என்னும் அமைப்பினை 'ஈறுகெட்ட' ஒரு அமைப்பாகக் கூறுதல் பொருந்தாதன்றோ ?.

அடுத்து 'செய்யா' என்பதனுடைய அமைப்பினைக் காணலாம்.

உண்ணா குதிரை

உண் + ஆ குதிரை உண் - வினையடி ஆ - எதிர்மறை இடைநிலை

'உண்ணா' என்னும் அமைப்பில் காலம் தொக்கு வருகின்றது. இன்னமும் எச்சப்பண்பினைக் குறிக்கும் ஈறும் தொக்கு வருகின்றது. எனவே இதனை முக்காலத்திற்கும் பொருந்தி வருவதாகக் கூறலாமல்லவா ? பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களிலும் பயன்படக்கூடிய வடிவமாகவே இவ்வடிவத்தைக் குறிப்பிடுகின்றார். முக்காலத்திற்கும் பொருந்திவரும் என்று குறிப்பிடப்படுவதால் ஈண்டு காலப்பொருண்மை தொக்கு வருகின்றது என்பது வெளிப்படை. ஈண்டு அமைப்பு நிலையில் எச்சப் பொருண்மையினைச் சுட்டும் வடிவமும் காணப்படவில்லை.

இனி இவ்வடிவத்தை வினைத்தொகையோடு ஒப்பிட்டுக் காணலாம்.

செய் குன்று (செய்த குன்று)

உண்ணு குதிரை (உண்ணுத குதிரை)

செய்' 'உண்ணு' என்னும் இருவடிவங்களுக்கிடையே காணப்படும் ஒரே வேறுபாடு எதிர்மறைப் பொருண்மைதான். 'செய்' என்னும் வடிவம் உடன்பாட்டில் வருகின்றது. 'உண்ணு' என்னும் வடிவம் எதிர்மறையில் வருகின்றது.

உடன்பாட்டுப் பொருண்மையில் வரும் 'செய் குன்று' என்பதனை வினைத்தொகை என்று கூறினுல் எதிர்மறைப் பொருண்மையில் வரும் 'உண்ணு குதிரை' என்பதனை எதிர்மறை வினைத் தொகை என்று கூறலாமல்லவா ? இக்கருத்து மேலும் ஆராய்தற்குரியது. 2

குறிப்புக்கள்

1 தமிழ்மொழியில் வினையமைப்பில் (மூலதிராவிட மொழிக் கூறுகிய) எதிர்மறைவரின் காலம் வருதல் இல்லை என்ற கருத்துக்கு முரண்பட்ட சில வினையமைப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வினையமைப்புக்களுக்கு முழுமையான விளக்கம் கிடைக்கப்பெற்ருல் 'செய்யா' 'செய்யாத' அமைப்புக்களுக்கு இன்னமும் தெளிவு கிடைக்கப்பெறலாம்.

2 தொல்காப்பியர் தொகைகள் எல்லாம் ஒரு சொல்நடைய என்றுதான் கூறுகின்ருரேயன்றி தொகைகளுக்குரிய விளக்கமாக இதனைக் கூறவில்லை. எனவே 'உண்ணு குதிரை' என்ற அமைப்பு தொகை சொல்லாகுமா என்பது ஈண்டு ஒரு பிரச்சினைக்குரியது அல்ல.

தமிழ் வாழ வளர.....?

வி. பொ. பழனிவேலனார்

முன்னுரை :

கடல் கொண்ட தென்னாடாகிய குமரிக்கண்டத்தில் இருந்த மதுரையில் முக்கழகங்கள் அமைத்து முத்தமிழ் வளர்த்தனர் முற்கால பாண்டியமன்னர். சேர, சோழ மன்னர்களும் அதற்கு உறுதுணையாகவிருந்தனர். தமிழ் நாட்டை முப்பெரும் மன்னர்களும் முறை பிறழாது முடிசூடி யாண்டனர்.

தமிழ்வளர்த்த பேரரசர் மூவர்க்குப்பின் தமிழ் நாட்டை யாண்ட அயலார் பலராவர். அவர்கள் தமிழ் வளர்ச்சிபற்றிக் கருதினாரிலர், வடமொழிக்கும் வடமொழி நூல்களுக்கும் முதன்மை யளித்தனர். தமிழில் வடமொழிக் கலப்பு மிகுதியாயிற்று. தமிழும் வடமொழியும் சமமாகக் கலந்து பேசவும் எழுதவும் தொடங்கினர். இந்நடையை "மணிபவள" (மணிப்பிரவாள) நடையென்றனர்.

இன்று மொழியியலறிவிலார் சிலர் "சமற்கிருதத்தி (வட மொழியி) லிருந்துதான் தமிழ்மொழி தோன்றிற்றென்றும்; தமிழி லிருந்தே வடமொழி தோன்றிற்றென்றும். மனம்போனபடி பேசு கின்றனர்

இன்று தமிழ் மக்கள் பேசுவதில் வடமொழிச் சொற்கள் பல ளிநடம் புரிகின்றன. கஷ்டம், நஷ்டம், இஷ்டம், சந்தோஷம், சிரமம், சௌரியம், சௌக்கியம், பிரச்னை, புஸ்தகம்' பிர்மாண்டம், அதிர்ஷ்டம், அற்புதம் அர்த்தம். அர்ச்சனை. சாமி, சாஸ்திரம். பரவாயில்லே, பாரம்பரியம். வியாபாரம், விவசாயம், வேஷ்டி, சஷ்டி அந்தஸ்து முதலியன சிலவாம்.

ஆங்கிலர் ஆட்சி இந்த நாட்டில் இருந்ததால் தமிழ் மக்கள் பேச்சு வழக்கில் பல ஆங்கிலச் சொற்கள் இடம் பெற்றுவிட்டன. அவற்றுள் சார், பென், பென்சில். பேப்பர். கூப்பன். டிக்கெட், பஸ். ட்ரெயின், போஸ்டாபீஸ். ரயில்வே ஸ்டேசன், கார்டு, கவர். ஸ்டாம்ப், ஷ்டாண்டு. ரிக்ஷா, ரோடு. லாரி. ட்ராக்டர். சினிமா, சாக்பீஸ், சாப்பீஸ், சர்க்கஸ், புக், காங்கிரஸ். கம்யூனிஸ்ட், சோச -லிஸ்ட், காலேஜ். ஹைஸ்கூல், எலிமெண்டரிஸ்கூல். பார்ட்டி, மிலிட்டரி, மீல்ஸ். ஹோட்டல், காபிகிளப், ஹாஸ்டல், டீகிளப், சலூன், கேட், பேக், பிரஸ், ட்ரெஸ். லைட், பேட்டரி, ஓவர் ஸ்டாப், மில். ஷாப், பிளாஸ்டிக், பவுடர், சோப், பேஸ்ட் முதலியன சிலவாம்.

புதுவது புனையும் எழுத்தாளர் பலரும் பிறமொழிச் சொற்களை மிகுதியும் கலந்து எழுதுவதே பெருமித நடையெனக் கருது கின்றனர் பிறமொழிச் சொற்கள் கலக்காமல் பேசும். எழுதும் தமிழர், இலரெனின் மிகையாகாது.

இந்தியையும் தமிழ் நாட்டில் புகுத்தித் தமிழைச் சீர் குலைக்க முற்பட்ட இந்தியப் பேராயத்தின் 23 ஆண்டு ஆட்சிக்குப்பிறகு தமிழ் நாடு தி. மு. க ஆட்சியின் கீழ் வந்தது. அன்று முதல் தமிழுக்கு நல்ல காலம் என்றே சொல்லலாம். இருமொழிக் கொள்கை ஏற்றம் பெற்றது; மும்மொழிக் கொள்கை முறியடிக்கப்பட்டது.

''மவுண்ட்ரோடு'' அண்ணாசாலை ஆயிற்று 'பஸ்ஸ்டேண்ட்' பேருந்து நிலையம் ஆயிற்று; 'பாரிஸ் கார்னர்' பாரிமுனை ஆயிற்று; 'டாலுக் ஆபீஸ்' வட்டாட்சியர் அலுவலகம் ஆயிற்று; ''போலீஸ் ஸ்டேஷன்'' காவல் நிலையம் ஆயிற்று; 'டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்' மாவட்ட ஆட்சித் தலைவரானார் 'டிரான்ஸ்போர்ட்' போக்குவரவு ஆயிற்று; 'சிப் செகரட்டரியெட்' தலைமைச் செயலகம் ஆயிற்று 'எக்ஸ்பிரஸ்' விரைவு வண்டியாயிற்று; மெட்ராஸ் ஸ்டேட்' தமிழ்நாடு ஆயிற்று; 'இஞ்சினியர்' பொறியாளர் ஆனார் 'டாக்டர்' மருத்துவர் ஆனார்; 'ரெவின்யூ இன்ஸ்பெக்டர்' வருவாய் ஆய்வர் ஆனார்; 'சப் இன்ஸ்பெக்டர்' சார் ஆய்வாளரானார்; 'டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்' பள்ளித்துணையாய்வரானார் இங்ஙனம் பல சொற்கள் மாற்றமுற்றன.

எனினும், இன்னும் தமிழக அரசு செய்ய வேண்டிய தமிழ்ப் பணிகள் பலவுள. அவை பற்றி ஈண்டுக் காண்போம்.

பெயர்கள் :

பண்டைத் தமிழிலக்கியங்களில் வேற்று மொழிச் சொற்களைக் காண்பதரிது. மாந்தர் பெயர், நாட்டுப் பெயர், ஊர்ப்பெயர் விலங்குப் பெயர், நிலைத்திணைப்பெயர் முதலிய யாவும் தமிழாகவே யுள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஆனால், இன்றோ அனைத்தும் வேற்று மொழிப் பெயர்களாகவேயுள்ளன. சின்னப்பன் பட்டினம், சென்னைப்பட்டினம், மெட்ராஸ், மதராஸ்எனமாற்றப்பட்டன; பறங்கிப்பேட்டை போர்ட்டோ நோவோ ஆயிற்று; மயிலாடுதுறை மாயவரம், மாயூரம் என ஆயிற்று: மரைக்காடு வேதாரண்யமாக்கப்பட்டது: மற்றும்பல.

மக்கள் பெயர்கள் இன்று நாராயணசாமி, கல்யாணசுந்தரம், கிருஷ்ணசாமி, இராமசாமி,கோபாலசாமி, சுப்ரமணியன், சண்முகம் கருணாநிதி, லக்ஷ்மணன், கணேசன், லதா, சுசாதா, சுமதி, செயலலிதா, சசிகலா, லலிதா, பத்மினி, சரோசா, சரஸ்வதி,லக்ஷ்மி பராசக்தி, பரமேஸ்வரி போன்ற பெயர்களாகவே இடப்படுகின்றன

ஒரு சில தமிழ்ப்பற்றாளர், பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகளார் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழில் தங்கள் பெயர்களை மாற்றிக் கொள்ள முற்பட்டனர், அதன் பயனாக இளங்கோவன், அன்பழகன், நெடுஞ்செழியன், மதியழகன், கோவேந்தன், வேழவேந்தன், வெற்றியழகன், மன்னர்மன்னன், இளவரசு, இளஞ்செழியன், இலக்குவன்; தமிழரசி, செல்வி, தமிழ்மணி,

மதியழகி, தேன்மொழி, தமிழ்ப்பாவை, தமிழ்ச்செல்வி, அன்பரசி அறிவரசி, மலர்க்கொடி, மலர்விழி, கயல்விழி, இளம்பிறை போன்ற பெயர்கள் தோன்றின.

தமிழ் நாட்டிலுள்ள மக்கள் பெயர், ஊர்ப்பெயர், தெருப்பெயர் முதலியன தமிழாகவே இருத்தல் வேண்டும். தமிழில் பெயரில்லாத வர் தமிழரெனப்படார்.

தமிழர் இல்லப்பெயர், தொழில் நிறுவனங்களின் பெயர், கடைகளின் பெயர், அரசுஅலுவலகங்களின் பெயர், பிறதொழிலகங்களின் பெயர்கள் யாவும் தமிழிலேயே எழுதப் பெறல் வேண்டும்.

தமிழ்நூல் படைப்புக்கள் :-

தமிழ் நூலாசிரியர், இதழாசிரியர், கதை, கட்டுரை, நாடகம், எழுதுவோர் தம் படைப்புக்களைத் தமிழிலேயே எழுதுதல் வேண்டும். அதாவது வேற்றுமொழிச் சொற்கலைக் கலவாது எழுதுதல் வேண்டும் வேற்றுமொழிச் சொற்களைக் கலந்து எழுதும் படைப்புக்களுக்குத் தமிழக அரசும், தமிழ்மக்களும் அரவணைப்புத் தரக் கூடாது; ஏற்றுக்கொள்ளவும் கூடாது.

பிறமொழிகளில் உள்ள நல்ல இலக்கியங்களையும், அறிவியல் நூல்களையும், தமிழாக்கம் செய்தலும் தமிழில் உள்ள சிறந்த நூல்களைப் பிறமொழிகளில் பெயர்த்தலும் வேண்டும். தமிழில் புதிய இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும்.

தமிழ்ப் புலவர் பெருமக்கள் மேற்கூறிய பணிகளைத் தம் தலையாய கடனாக் கொள்ளல் வேண்டும்.

பிழைப்புக்காகவே தமிழ்ப் படித்த புலவர் பலருளர்; அவர்தாம் தமிழ்க்கொலைஞராயுளர். தமிழுக்காகவே தமிழ்படித்த புலவர்களேனும் தமிழால் பிழைப்பதுடன் தமிழுக்குப் பிழைசெய்யாது தமிழ் வளர்ச்சிக்குத் தம்மாலியன்ற தொண்டுகள் செய்தல் வேண்டும். தமிழ்ப் புல்லுருவிகளை இனங்கண்டு விலக்க வேண்டும்.

அரசியல் சட்டங்களும் நடைமுறைகளும் :-

தமிழ் நாட்டு அரசியல் சட்டங்கள் தமிழ்ப்பற்றும், தமிழ் மொழியியலறிவும், சிறந்த ஆங்கில அறிவும் உள்ளவர்களைக் கொண்டு தமிழில் ஆக்கப்பெறல் வேண்டும். அரசு அலுவலக நடைமுறைகள் யாவும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்மக்கள் அனைவரும்

சட்டங்களை நன்கு அறிந்து கொள்ளவியலும்; முறை மன்ற நடப்புகளைப் புரிந்து கொள்ளவியலும். தமிழக அரசு அலுவலகங்களிலெல்லாம் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று ஆணையிட்டிருந்தும் அரசு அலுவலர் பலரும் ஆங்கிலத்தையே கையாளுகின்றனர். அவர்களுக்குப் போதிய தமிழறிவு இல்லாமையே காரணியம்.

ஆதலால், தமிழ்நாட்டில் பணிபுரியும் அரசு அலுவலர் அனைவரும் தமிழில் புலமை பெற்றவராயிருத்தல் வேண்டும். குறைந்தது இளம்புலவர் தேர்விலாவது வெற்றி பெற்றிருத்தல் வேண்டும் என சட்டமியற்றல் வேண்டும். அன்றுதான் அரசுப்பணிமனைகளில் தமிழ்மணம் வீசும்.

வழக்குரை மன்றங்களில் :

முறை மன்றங்களில் வழக்குரைஞர் தம் வழக்குகளைத் தமிழிலேயே எடுத்துரைத்து வழக்காட வேண்டும். நடுவர் தம் தீர்ப்புகளை தமிழிலேயே எழுதுதல் வேண்டும். உசாவல்களும் உரையாடல்களும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும்.

அறிவியல் கண்டுபிடிப்புகள்

அறிவியல் ஆய்வு செய்யும் தமிழர் தம் கண்டுபிடிப்புகளைத் தமிழில் எழுதி வெளியிடல் வேண்டும். பிறநாட்டு அறிவியலறிஞர் எழுதும் நூல்களைத் தமிழில் பெயர்த்தல் வேண்டும். அயல் நாட்டறிஞர் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கும் புதுமைகளையும் விந்தைகளையும் தமிழறிஞர் உடனுக்குடன் தமிழாக்கம் செய்தல் வேண்டும். அரசு அத்தகைய நூல்களை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கற்ற தமிழரும் மற்றைத் தமிழரும் :

கற்ற தமிழர் யாவரும் தமிழிலேயே எழுதவும் பேசவும் வேண்டும். அவர்களைப் பின்பற்றி மற்றவரும் அவ்வாறே செய்தல் வேண்டும். நகரத் தொடர்பில்லாத நாட்டுப்புற மக்கள் தமிழிலேயே பேசுவதை, கலப்பில்லாத தமிழில் பேசுவதை, நாமறிவோம். எல்லோரும் அவ்வாறு பேசினால் என்ன? தமிழ் நாட்டில் தமிழ் களிநடமிடுமல்லவா ?

'மொழி' என்பது மாந்தர் தம் உள்ளக் கருத்தைப் பிறர்க்கு அறிவிக்கும் கருவிதானே ! அதை எந்த மொழியால் தெரிவித்தால் என்ன? தமிழால் மட்டுந்தான் தெரிவிக்கவேண்டுமா? என்கின்றனர் சிலர்.

ஆம். உண்மைதான். ஆனால், உண்டி யென்பது வயிற்றுப் பசியைப் போக்கத்தான்; எதையுண்டாலும் பசி நீங்கும். அதற்காக கல், மண் முதலிய எல்லாவற்றையும் நாம் உண்கிறோமா? இல்லையே !

வயிற்றுக்கேடுண்டாக்காத, வாய்க்குச் சுவையான, சாரமுள்ள மென்மையான உணவுப் பொருள்களைத் தெரிவுசெய்து அறுசுவை யுங் கூட்டியல்லவா உண்கிறோம் !

அதுபோன்று தான் மொழியும். நல்ல, பண்பட்ட, பழக்கப் பட்ட அவரவர் தாய்மொழியில் ஒருவர் தம் உள்ளக்கிடக்கையை எடுத்தியம்புவது போன்று வேற்றுமொழியில் எடுத்துக்கூறி விளக்க வியலாது. தம் தாய் மொழியிலும் தூயநடையில் விளக்குவதே சிறப்பாகும்.

பலகலப்புணவு வயிற்றிற்கு கோளாறுண்டாக்குவது போன்றே கலப்பு மொழியும் கருத்திற்கேடு விளைக்கும்.

எனவே, ஒருவர்க்கு அவன் தாய் மொழியியே நல்ல கருத் துணர்த்தும் கருவியாம். அதுவும் கலப்பின்றித் தூய்மையாயிருப்பது பொன்மலர் நாற்றமுற்றது போன்ற சிறப்புடையதாம்.

ஆகவே, கற்றவரும் மற்றவரும் தமிழில் பேச, எழுதப் பழகிக் கொள்வார்களாக.

கல்வி நிலையங்கள், தொழில்கல்வி நிலையங்கள் :

பிறமொழிப் பாடங்கள் தவிர ஏனையபாடங்கள் யாவும் தமிழில் தான் கற்பிக்கப் பெறல் வேண்டும். தொழில் கல்வியும் தமிழில் கற்பிக்கப்பெறல் வேண்டும். அங்ஙனம் கற்பித்தால்தான் தமிழர் நல்லறிவும், தொழில் நுணுக்க அறிவும் பெற வாய்ப்புண்டாகும். ஆராய்ந்து அமைவுடைய கற்கவியலும்'

தொழில் கல்வியைப் பிறமொழி வாயிலாகக் கற்பதுதான் சிறப் பாகும் என்பவர் தாய் மொழியறிவில்லாதவரும் ஆரவாரத்தன்மை யுணருமாவர்.

புரியாத மொழியில் கற்கும் அறிவு கருத்தில் நில்லாது; கிளிப் பிள்ளைப்பாடமேயாம். கல்வியிலும் தொழிலிலும் நன்கு தேர்ச்சியும் பெறத்தாய் மொழியே உதவும்.

தமிழர் இல்லப் பொருள்கள்:

தமிழரில்லங்களில் புழங்கும் பொருள்கள் யாவற்றையும் தமிழ்ப் பெயரால் வழங்கவேண்டும். உணவுப்பண்டங்களையும் தமிழ்ப் பெயரிட்டழைக்க வேண்டும். தெரியாதவர் தெரிந்தவர்பால் கேட்டறிதல் வேண்டும்.

இன்று தமிழ்நாட்டிலுள்ள உணவு விடுதிகளின் பெயர்கள் தமிழில் இல்லை. அவற்றிலுள்ள உணவுப் பண்டங்களின் பெயரும் தமிழன்று, எனவே, எல்லாம் தமிழாக்கப்பட வேண்டும்.

தமிழர் கடமை :

தமிழர் யாவரும் தங்கள் இல்லப் பெயர்களையும் மக்கள் பெயர்களையும் தமிழில் இடல் வேண்டும். தாங்கள் நடத்தும் தொழிலகங்களின் பெயர்களையும் தமிழிலேயே வைத்தல் வேண்டும். ஊர்ப் பெயர், தெருப்பெயர் வேற்றுமொழியில் இடப்பட்டிருந்தால் தமிழில் மாற்றியமைக்க வேண்டும்.

தெய்வப் பெயர், கோவில் பெயர்களும் தமிழில் இடவேண்டும்.

வழிபாடும் தமிழில் செய்தல் வேண்டும்,

கல்வி நிலையப் பெயர்களும் தமிழில் இருத்தல் வேண்டும்.

எங்கும் தமிழ், எல்லாந்தமிழ் என்ற நிலை உருவாகவேண்டும். தாய்மொழியைத் தாயினும் சேயினும் சிறப்பாகப் பேணிக் காத்தல் வேண்டும்,

"தமிழுக்கு அமுதென்று பேர்,
அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்ற பாரதிதாசனாரின் உணர்வும்,

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்"

என்ற பாரதியாரின் ஆர்வமும் ஒவ்வொரு தமிழர் உள்ளத்திலும் ஊடுருவிப் பாயவேண்டும்.

அகரமுதலிகள் :

தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியை வெளியிடும் பொறுப்பைத் தமிழக அரசு ஏற்று, மொழிப்பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணரவர்களைக் கொண்டு வெளியிட்டுவருவது பாராட்டத்தகுரித்தே,

இன்றுள்ள தமிழ் அகரமுதலிகள் யாவும் அயல் மொழிச் சொற்களுக்கு வடமொழி முதலிய, பிறமொழியில் பொருள் கூறுபவை.

தமிழில் தக்க புலமையும் தமிழ்ப்பற்றும் சான்ற பெரியோர்களைக் கொண்டு தமிழ்ப் பேரகர முதலி எழுதச் செய்தல் வேண்டும். தமிழகச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள அகரமுதலிகளைப் பேரறிஞர் ஞா. தே. பாவாணரைக் கொண்டு திருத்தம் செய்வது நன்றாம்.

ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் தேடி இடர்ப்படுவதைவிட ஏற்ற தமிழ்ச்சொற்களை ஆக்கிக்கொள்வது ஏற்புடைத்தாம்.

இயல், இசை, கூத்து :

பண்டைக்காலத்தில் இயற்றமிழ், இசைத்தமிழ், கூத்துத்தமிழ் சிறந்த நிலையில் இருந்தன. முத்தமிழையும் முச்சங்கத்தினரும் போற்றிப்பல நூல்கள் யாத்தனர். ஆனால், இன்று இவை தமிழ் நூல்கள் கிடைத்தில. பெயர்கள் மட்டும் சில இலக்கிய இலக்கண உரையாசிரியர்களால் அறியக்கிடக்கின்றன. தீ, நீர், கறையானால் அழிக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

'தேவாரம்', 'திருவாசகம்', திவ்விய 'பிரபந்தம்', முதலிய தேவப் பாடல்கள் ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை. கழகக் கால நூல்கள் இன்று கிடைக்கில.

இற்றைப் புலவர் பண்டைப் புலவர் இயற்றிய சில இயற்றமிழ் நூல்களை வைத்துக் கொண்டு பாராட்டிப் பேசிப் பதிப்பது உரையெழுதியும் வாழ்கின்றனரேயன்றித் தாங்கள் இன்றைய சூழலைச் சேர்ந்த இலக்கியம் எதும் படைத்திலர். இருபதாம் நூற்றாண்டு இயல், இசை, நாடக நூல்கள் எனக்கூறிப் பெருமைப்படுமளவுக்கு யாதும் படைத்திலர்.

எனவே, இன்றைய தமிழ்ப்பேராசிரியர்களும், புலமைச் சான்றோரும் தம் நுண்மாண் நுழைபுலங்கொண்டு ஆய்ந்து இயலிசை நாடக நூல்கள் பல படைக்க முன்வரல் வேண்டும். அவர்க்குத் தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும்.

தமிழ்நாட்டு வானொலி நிலையங்கள் கருநாடக இசைக்கே முதன்மையளிக்கின்றன. தமிழிசை தடுமாறி நிற்கிறது. 'தியாகராயர் கிருதிகள்' தாம் மிகுதியும் இடம் பெறுகின்றன; அடுத்துச் சில தேவார திருவாசகப் பாடல்கள்

நாடக நூல் சுந்தரனார் மனோன்மணீயம் ஒன்றுக்குப்பின் எதுவுந் தோன்றவில்லை.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் விபுலாநந்த அடிகளியற்றிய 'யாழ்நூல்' என்னும் தமிழிசை நூலை வெளியிட்டமை பெரிதும் பாராட்டற் குரித்தே. ஆனால், அதை வாங்கிப் பயன்படுத்துவோர் அரியராய் உள்ளனர்.

தமிழிசை, தமிழ் நாடக நூல்கள் பல யாத்தல் வேண்டும்

வருங்காலத் தமிழர்க்குப் பயன்படும் முத்தமிழ் நூல்கள் பல சமைத்தல் வேண்டும். பலதுறைக் கருத்துக்கள் பொதிந்த பொத்தகங்கள் பல புறப்படல் வேண்டும்,

முடிவுரை !

தாய்மொழிப்பற்று என்பது உலகிலுள்ள எல்லா மொழியினர்க்கும் பொது. தாய்மொழிப் பற்றிலாதாரை இழிந்தவர்க்கு ஒப்பாவர். ஒருவரது சொந்தமொழியைத் தமிழில் 'தாய்மொழி'யென்றும் ஆங்கிலத்தில் 'Mother-tongue' என்றும் அழைப்பர்.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் நமக்கிரு கண்கள் போன்றவை இவ் விரண்டு பற்றுமற்ற சோற்றுப்பற்றர் பலராவர்.

தாய்மொழியை வளமுறச் செய்தல் தலையாய கடனன்றோ! ஆகவே, தமிழர்களாகிய நாம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழி வளமுடன் நெடிது வாழச் செய்ய மேற்கூறிய பல்லாற்றாலும் முயல்வேமெனச் சூள் கொள்வோமாக, அன்றுதான் நம் பண்பாடு, நாகரிகம் காப்பாற்றப்படும்.

இன்றைய தமிழக அ. இ. அ. தி. மு. க. அரசும் தமிழ்க்கு அனைத்து உதவியும் புரியும் என்பதுறுதி! வெல்க, தமிழ்!

வாழ்க தமிழ்!

முல்லைக் கலித்திறன்

(துணர் 53, மலர் 8, பக்கம் 120-ன் தொடர்ச்சி)

இரா. சுந்தரமூர்த்தி எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

உவமைத் திறன் :

நூற்றுவரும் ஐவரும் :

துரியோதனன் முதலியோர் பாண்டவர் ஐவரோடு போர் புரிந்தனர் அப்போர்க் களத்தைப் போன்று ஆயர்களும் காளைகளும் போரிடுங் காட்சி விளங்குகிறது.

" புரிபுமேற்சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வில் ஐவர் அட்ட
பொருகளம் போலும் தொழூஉ " (முல்லைக்கலிப்பாடல்-4)

என வரும் அடிகளில் நூற்றுவரைப் பற்றியும், பாண்டவரைப் பற்றியும் வந்துள்ள செய்தியினை அறியலாம்.

காளைகள் திரிந்தன :

இறுதிக் காலத்தின் பெருந்தீயைப் போலவும் கணிச்சிப்படையினைப் போலவும் காலனைப் போன்றும் கூற்றுவனைப் போன்றும் காளைகள் களத்தில் சுழன்று திரிந்தன

"மடங்கலும் கணிச்சியும் காலனும் கூற்றும்
தொடர்ந்து செல் அமையத்துத் துவன்றுஉயிர் உணீஇய
உடங்கு கொட்பனபோல் புகுத்தனர், தொழூஉ"
(முல்லைக்கலிப்பாடல்-5)

தீயும் உயிரைப் போக்கும். கணிச்சியும் உயிரைப் போக்கும். காலனும் கூற்றுவனும் உயிரைப் போக்குவர். திரிகின்ற காளைகளும் பனித உயிர்களைப் போக்கும் என்பதற்கு மேற்கண்ட உவமைகளை இவ்வாறு பொருத்திக் காட்டுவதில் முல்லைக்கலியாசிரியர் வல்லவராக விளங்குகிறார்.

இருபெரு வேந்தர்கள் :

காளைகளும் இடையர்களும் போரிடுங் காட்சி, இருபெரு வேந்தர்கள் போரிட்ட மாட்சியினை ஒக்கும்.

ஆங்கஏறும் பொதுவரும் மாறுற்று மாறு
இருபெரு வேந்தரும் இகலிக் கண்ணுற்ற
பொருகளம் போலும் தொழூஉ ''
(முல்லைக்கலிப் பாடல் — 5)

எனவரும் அடிகளில் இவ்வுவமைச் செய்தியினை அறியலாம்.

குடல் மாலைகள் :

காளைகள் ஆயர்களைத் தாக்கின். அவர்கள் குடல்கள் கீழே விழுந்தன. பருந்துகள் அலகுகளில் பற்றி உண்பதற்காக எடுத்துச் சென்றன. பருந்துகளிடத்திலிருந்து தவறி விழுந்த குடல்கள் ஆல மரத்தின் கிளைகளிலும் கடம்ப மரத்தின் கிளைகளிலும் விழுந்தன, தெய்வங்களுக்கு வழிபட்ட மலர் மாலைகளைப்போல குடல் மாலைகள் தொங்கின.

'' ஏறுதம்கோலஞ்செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்
ஞாலங் கொண்டு எழூஉம் பருந்தின் வாய்வழீஇ
ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலைபோல் தூங்கும் சினை ''
(முல்லைக்கலிப் பாடல் — 6)

என வரும் அடிகளில் இத்தகு ஓவியத்தைக் காணலாம். இதுகாறும் உவமைச் செய்திகள் பலவற்றை அறிந்தோம். இனி உரையாடல் திறனைக் காண்போம்.

உரையாடல் திறன் :

'' பிளந்த மாவடு போன்ற கண்ணினால் என்னைக்
கொண்டாய். என்நெஞ்சைத் திருடிக்கொண்ட திருடியே.-''

இவ்வாறு தன்னெஞ்சம் திருடியவளைப்பற்றித் தலைமகன் எடுத்துரைத்தான்.

'' உன்னுள்ளத்தை நான் திருடவில்லை. என்னுள்ளம் புனத்தில் அலுவல்பார்க்கும் தமையனுக்கு உணவு கொண்டு செல்லத் துடிக்கிறது. என் தந்தைக்குக் கறவைக்கலம் எடுத்துச்செல்ல நினைக்கிறது. மேலும் என்தாய் தினையறுத்த வயலில் கன்றை மேயவிட்டிருக்கிறாள் அக்கன்றை என்னுள்ளம் நினைக்கிறது. நான் உன்னை நினைக்கவில்லை.'' என ஆயமகள் தன் கடமைகளை எடுத்துரைத்தாள்.

"இவ்வலுவல்களை நானே ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுது உச்சிப்பொழுதாய் இருக்கிறது. காயாம் பூக்கள் மலர்ந்துள்ள சோலையைப் பார்ப்பாயாக, அவ்விடத்தில் பெண் யானை உறங்குவது போன்ற பாறை உள்ளது. அங்கே சுனை இருக்கிறது. நுங்கின் நீரைப்போலச் சுனை நீர் சுவைக்கும். சுனையில் ஆடுவோம். செம் முல்லை, முல்லை மலர்கள் பறிப்போம், அச்சோலையில் என்னு டன் தங்கிப் பின் உன் ஊருக்குச் செல்வாய்,'' எனத் தலைமகன் தன் வேட்கையைக் கூறினான்.

"வழி விடுகிறாயா? இல்லை உன் பண்புகளை எடுத்துச் சொல் லட்டுமா? உன் மயக்கு மொழிகளை மயங்குவாரிடத்தில் போய்க் கூறுவாய்,'' என்று அவனின் பரத்தமைச் செயல்களைப் பழித் துரைத்தாள்.

"கொலைக் கண்ணும் தளிர் மேனியும் உடைய மாயவளே. உன்னைக் காட்டிலும் இம்மண்ணுலகத்தில் எவருமிலர். நீயே சிறந்த வள். திருமாலை நினைத்து இச்சூள் மொழியை உன்னிடத்தில் சொல்கிறேன். நீயே என்னுடன் வருவாய்,'' எனத் தலைமகன் அழைப்பினை விடுத்தான்.

"உறுதிமொழியைப் பொய்ப்பவன் நீ. காஞ்சி மரத்தின் கீழ் பெண்டிரெல்லாம் குரவையாட இருக்கிறார்கள். நானும் செல்வேன் அங்கே வந்து என்னைப் பார்ப்பாயாக,'' எனத் தலைவி பலர்முன் அவனை வருமாறு குறிப்பிட்டாள்.

இம்முல்லைக்கலி எட்டாம் பாட்டில் உரையாடல் பலவகைச் செய்திகள் வருகின்றன. தலைவி, தமையனுக்கு உணவு எடுத்துச் செல்வாள் தந்தைக்குக் கறவைக்கலம் கொண்டுபோய்க் கொடுப் பாள். மேலும் கன்றினை மேய்ப்பாள் போன்ற செய்திகளை அறிய லாம். சுனை நீர், சோலை, தமிழகத்தின் இயற்கைத் திறன்களை எடுத்துக் காட்டுவன. மேலும் தலைவன் பரத்தமைத் தொடர்புடை யவன் என்பதனை அறியலாம். இறுதியில் தலைவன் திருமாலை நினைத்துக் கூறுகின்ற சூள்மொழியினை உணரலாம், பலர் முன்னிலை யில் தலைவனை மணந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் தலைவி யிடத்தில் இருந்தது. இனி முல்லைக் கலியின் பதினைந்தாம் பாடல் உரையாடலைக் காண்போம்.

முல்லைக் கலிப் பாடல்: 15

"மறைவாகக் கள்ளையுண்டவன் வெறியாகிவிடுவான். உடல் நடுங்கி ஆடுவான். வெட்கமில்லாமல் ஆடி அசைவான். சொற் களைக் கொட்டுவான். குடித்தவன் செயலைப் போல என் காதல்

செய்தியும் தெரிந்துவிட்டது காண்,'' எனத் தலைவி தான் மறைத்து வந்த காதல் வாழ்வு தெரிந்துவிட்டதே என வருந்தினள்.

மேலும் தலைமகள் தோழியிடம், ''ஒருநாள் ஆயர்மகன் முல்லை மாலையும் தலைமாலையும் சூடிவந்தபொழுது முல்லையைப் பெற்று கூந்தலில் முடிந்துகொண்டேன். இல்லத்துக்கு வந்தேன். தாயோ, கூந்தலைத் தூய்மை செய்ய, விரித்துப் பிரித்துப் பார்த்த பொழுது என் தாய் முன் மலர் வீழ்ந்தது. என் தந்தையும் இல்லத்தில் இருந்தார். தாய் வினவவும் இல்லை, சினக்கவுமில்லை. நெருப் பினைத் தொட்டவர் கை நடுங்கி நிற்பர். அவர் நிலையைப் போல நானும் நடுங்கினேன். என் கூந்தலை முடித்தேன். நீலச் சிற்றுடை யைப் பற்றிக்கொண்டேன். இல்லத்தின் அண்மையிலுள்ள சிறு காட்டில் ஒளிந்தேன். நான் அஞ்சுகிறேன் தோழி,'' என்று தலைவி தோழியிடம் களவு வாழ்க்கையினைப் பெற்றோர் அறிந்தனர் எனிப் தனை எடுத்துக் கூறினள்.

''அஞ்சாதே. அவன் மாலையைச் சூடியதனால் அவனுக்குரி யவள் நீ. நம்மவர் மணத்துக்கு ஏற்பாடு செய்தனர். பந்தல் போடுவர், புதுமணல் பரப்புவர், நீ எண்ணிய நல்வினையும் நிகழும்,'' என்று தோழி கூறினள்.

தலைவன் சூடிய மலரினைத் தான் சூடியதனால் அவனுக்கு உரியவ ளானள் என இவ்வுரையாடலினால் அறிகிறோம். இல்லத்தின் அண்மையில் சிறு காடு ஒன்று இருந்தது என அறிகிறோம். இறுதி யில் தோழி திருமணத்துக்குரிய செயல்கள் நிகழ்வுறுகின்றன என்று உரைத்தாள். இவ்விடத்தில் தலைமகளுக்கு உற்ற தோழியாக விளங்குகிறாள்.

முல்லைக் கலிப்பாடல்: 16 (உரையாடல்)

''கன்றினை ஓட்டிச் செல்லும் பொழுது, எதற்காக என்னைத் தடுக்கிறாய். கயிற்றைப் பிடிக்காதே. விலகிநில், வழியை விடுவா யாக,'' என்று தலைமகள் வழிகேட்டு நின்றாள்.

''வழிவிடமாட்டேன். வலிமையான கன்றைப் போன்றவளே, முடிந்தால் இவ்விடத்தைவிட்டு விலகிப்பார்,'' என்று தலைமகன் உரைத்தான்.

''இவ் நீ விடத்தைவிட்டு நீங்குவாய், கன்றினைப் பற்றினால் தாய்ப்பசு சினந்து வரும், அப்பசுவைப் போல உன்னைத் தண்டிக்க என் தாய் வருவாள்,'' என்பதனைக் கூறி

அவனை அச்சுறுத்திப்பார்த்தாள், ஆனால் அத்தலைவனோ அஞ்சவில்லை.

அவன் அஞ்சாமல், உன் தாய் வந்தால் வரட்டும், நான் அஞ்சவில்லை. பிறரும் வரட்டும், நான் அஞ்சவில்லை, அரசனும் இவ்விடம் வரட்டும் நான் தளர மாட்டேன்,'' என்று உறுதியுடன் கூறி நின்றான்.

'' நான் எவ்வளவோ சொல்லியும் நீ கேட்கவில்லை. மழைக் காலத்தில் காளையானது தலைசாய்த்து நிற்கும் அதுபோல நிற்கக் கூடியவனே, மயக்கம் அடைந்துள்ளாய். வெட்கமில்லாதவனாக விளங்குகிறாய். பால்கலத்தோடு நாளை அவ்விடம் வருவேன். நீ நாளை வருவாய்,'' என்று கூறி அவனுக்கு உரிமையைக் கொடுத்தாள்.

மேற்கண்ட உரையாடலில் தலைவியின் எண்ணத்தினை அறியலாம். தலைவனின் உறுதியான அன்பினையும் அறியலாம். இவ்வுரையாடலில் எளிய நடையினைப் பின்வருமாறு காணலாம்.

'' யாய் வருக ஒன்றோ; பிறர் வருக, மற்றுநின்
கோவரினும் இங்கே வருக தளரேன் யான்
நீ சுருளி நல்கப் பெறின்.''

எனவரும் அடிகளில் வரும் எளிய நடையாக உள்ளது. உன் தாய், மற்றவர்கள், அரசன் ஆகியோர் வந்தாலும் நான் தளரமாட்டேன் என்றுரைக்குமிடத்தில் தலைவனின் உளப்பாங்கினை உய்த்துணரலாம். மேலும் கன்றினை யாரேனும் தொட்டால் தாய்ப்பசு சினந்து தாக்கும். அதுபோன்று நீ மறித்தாய் என்றால் என் தாய் உன்னைத் தண்டிக்க முற்படுவாள் என்று உவமையுடன் தலைமகள் கூறும் இடமும் நயமுடையதாம்.

முல்லைக் கலிப்பாடல்: 9 (தனிமொழித்திறன்)

"வண்டியில் பூட்டப்பட்ட இளங்காளையைப் போல் விளங்கும் இவள் செம்மாந்து வருகிறாள். மோர்ப்பானையுடன் வந்தவளாகவும் அழகுடன் விளங்குகிறாள். நெஞ்சே! காண்பாயாக பெருனைப்பு மகளிரெல்லாம் இவளுக்கு ஈடாக மாட்டார்கள். முனிவரும் இவள் மேனியழகு கண்டால் புண்படுவர். இவள் உடல் முழுதும் கண்களே ஊர்வசி, திலோத்தமை முதலியோர் இவளிடத்தில் வனப்பையெல் ஈந்து விட்டனரே. காமன் கோயிலுக்குச் சென்றாள் என்றால்,

அவனும் இவளிடத்தில் நாட்டங்கொண்டு படைக் கருவிகளைத் தவறவிடுவான், யார்நோக்கினாலும் வருத்தத்தை ஏற்படுத்துவான். இவள் வரும்பொழுது, ஊர்ப்பெண்டிர் ஒவ்வொருவரும் தங்கள் கணவரைப் புறத்துப் போகாமல் காப்பார்கள். வீட்டு வாயில்களை அடைப்பார்கள்,'' என்று தலைவன் தலைவியை நோக்கியவுடன் தனிமொழியில் கூறினான் எனக்கொள்ளலாம்.

இந்த அமைப்பினை ஆங்கில நாடக இலக்கியத்தில் 'தனிமொழி' என்று அழைப்பர்; இப்பாடலை முல்லைத்தலைவனின் தனிமொழியாக அமைத்தோம் என்றால் பாடல்பொருள் சிறப்புறும் எனலாம். இத் தனிமொழியில் தலைவியின் நடை இளங்காளையைப் போலச் செம் மாந்த நடையாக இருக்கிறது'' என்று தலைமகன் உவமையுடன் கூறிக்கொண்டான். இப்பாடலில், தமிழகத்தில் காமன் கோட்டம் இருந்தது என்று அறிகிறோம்.

எனவே முல்லைக்கலி உவமைத்திறன் செறிந்தது. உவமையில் தெளிவினைக்காணலாம். சங்க நடைத் தன்மையினைப் பயின்றுணர லாம். அக்காலத்தவர் உவமையாக உரையாடினர். பல்வகைச் செய்திகளைக் கலந்து உரையாடினர். ஆதலின், உவமையில், உரையாடலில், தனிமொழித் திறனில், ஓசைத் திறனில் முல்லைக்கலி மாண்புடன் மிளிர்கிறது. முற்பட்ட இலக்கியத்திற்கும் பிற்பட்ட இலக்கியத்திற்கும் முகிழ்த்துத் தோன்றிய இன்றமிழ் இலக்கியமாய் இலங்குகிறது.

பொங்கல் வாழ்த்து

மெய்யுரை புகன்ற தெய்வப் புலவன்
பெருநாள் முன்வரும் திருநாள் மக்கள்
உழைப்பின் உயர்வை செழிப்புற நல்கும்
மங்கலத் திருநாள் செங்கதிர்ப் பெருவிழா
பொங்கல் வாழ்க ! புதுநலம் பொங்குக !
தங்கிய இருளெலாம் தணந்தொளி விரிக !
தமிழ் வளம் பொங்குக தமிழ்ப்பொழில் அன்பர்
இல்லந் தோறும் நல்லன பொங்க
முத்தமிழ்த் தாயினைப் போற்றி
வாழ்த்துதும் வாழிய ! வாழிய உலகே !

சிலையில் கலை

பேராசிரியர் சி. கோவிந்தராசனார், கரந்தை.

1 கலை:— தமிழ் வழக்கிலே கலைகள் 64 - என்று வரையறை செய்துள்ளனர். கம்பர் கூறியுள்ள நாமகள் வணக்கத்துள் '' ஆயகலைகள் அறுபத்துநான்கினையும் ஏய உணர்த்தும் என் அம்மை '' என்று கூறுகின்றார்.

இத்தகைய கலைகளுள் மண்ணாலும், மரத்தாலும், கருங் கல்லாலும் வளர்ந்துள்ள கலை, சிற்பக்கலையாகும்,

2 சிற்பக் கலை :— இந்தியப் பெருநாட்டில் எழுந்துள்ள அற்புத மான கோயில்களெல்லாம் சிற்பக்கலையின் வளர்ச்சிக்கோர், எடுத்துக்காட்டாக விளங்குகின்றன,

3 சிற்பக் கலையின் பாகுபாடு :— கட்டிடம், செதுக்கு, படிமம் மேனி என்ற வகையுள் அடங்கும்.

1) கட்டிடக் கலை ;— கட்டிடக் கலைக்கு அஜந்தா, எல்லோரா குடைவரைக் கோயில்களிலிருந்து, தஞ்சைப் பெரியகோயில் வரையில் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

2) செதுக்குக் கலை :— இதுவே, அழகுணர்ச்சியைப் புலப்படுத்தும் செதுக்குச் சித்திரங்களாகும். இவை கொடிபோன்றும், மலர்போன்றும், வரிபோன்றும், மாலைகள் போன்றும் கட்டிடங்களின் உள்ளும் புறமும் புனைந்து செய்யப்படும் ஒப்பனைகளாகும்.

3) படிமம் :— இவை, நினைவுச்சின்னங்களாக, மனிதராய்ப் பிறந்து மாண்புறு செயல் செய்த பெரியோர்கட்கும், சமயப் பெரியோர்கட்கும் நினைவாக அமைக்கப்படும் வடிவமாகும்.

4) மேனி :— இதனைத் திருமேனி என்றும் கூறுவர் இது, தெய்வநிலையை உருவாக்கும் தத்துவங்களை, சிற்பாசாரியன் மனத்தில் உருவாக்கிப் பின்னர் கல்லில் வடித்து உருவாக்கும் தெய்வங்களின் பலவகைத் தோற்றங்களாகும்.

1 தமிழகத் தெய்வச் சிலைகளுள் நாம் முதன்மையாக வணங்குதற்குரிய தெய்வம் கணபதி யாகும். இத்தெய்வத்தினையே பிள்ளையார் என்றும் கூறுகிறோம். பிள்ளையார், பூதகணங்களுக்கெல்லாம் தலைவன் என்ற கருத்தினாலேயே கணபதி என்றழைக்கின்றோம்.

பூதம் மக்கள் பிறப்புக்கு ஐந்தாகும். இதனையே திருவள்ளுவரும் ''பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'' என்றார். மனத்தால் உருவகிக்கும் பூதங்கள் ஐந்திற்கும் தலைவன் அறிவாகும். எனவே, மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய உணர்வுகளையே பூதங்கள் என்கிறோம். அவற்றை ஒழுங்குபடுத்துவது அறிவு. அறிவினையே தெய்வமாகக் கண்ட தத்துவ உருவே ''கணபதி'' திருமேனி.

இத்திருமேனிக்குரியதாக சிற்பி தத்துவ உணர்வோடு செய்தமைத்த வடிவு 'ஓம்' எனும் பிரணவ வடிவமாகும். 'ஓம்' என்ற எழுத்துகளுக்கு ஓர் தத்துவ வடிவு அமைத்ததே பிரணவ வடிவமாகிய யானைமுகக் கடவுள். இவ்வடிவு எவ்வாறு சிற்பியின் அற்புதச் செயலால் உண்டானது என்பதைச் சிந்திப்பின் சிற்பக்கலையின் நுட்பம் புலனாகும்.

2 யானைமுகம் இல்லாமலேயே ஐந்துகரத்தினைச் சிற்பியர் வல்லபைக் கணபதியாக உருவாக்கியுள்ள சிலைகளும் தமிழகத்தில் உள்ளன.

3 தமிழ்நாட்டில் சிற்பக்கலை கி. பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்தே வளர்ச்சியடைந்துள்ளது. இதனைப் பல்லவர் காலம் எனலாம். பல்லவர் காலத்தில் கற்பாறைகளில் புடைப்புச் சிற்பமாகவே சிற்பியர் தெய்வத் திருமேனிகளை ஆக்கியுள்ளனர். அத்தகைய சிற்பங்களுள் ஒன்றாகும் திருமால் திருமேனியே கலைக் காட்சிக்கு விருந்தாகின்றது. அழகிய தலைமுடி, வட்டமான முகம், பரந்த மார்பு, நெடிய தோற்றம், உதரபந்தம், வாகு வளையம், காதணிகள், ஆடையமைப்பு இவைகளின் ஒருவகை அமைப்பே பல்லவர் காலச் சிற்பம் என்பதற்குச் சான்றாகும். சோழர்காலத் திருமால் திருமேனியமைப்பில் ஒப்பனைகளும், அணிகலன்களும், வளர்ச்சியடைந்திருப்பதுடன், வேலைபாடமைந்த முடியும் அமைக்கப்பட்டிருக்கும்.

4 அடுத்து சோழர் கால சிற்பத்திறனைக் காண்போம். கி. பி 10-ஆம் நூற்றாண்டுக்குரிய சோழர் காலச் சிற்ப வடிவங்களில் திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமாளின் திருமேனி குறிப்பிடத்தக்கதாகும். திருமாலே பாணமாகவும், மேருவே வில்லாகவும் கொண்டுள்ளத் திருமேனி. பல்லவர் காலச் சிற்பக் கலையின் வளர்ச்சியாக இருப்பதைப் பார்க்கலாம். இத்திருமேனியின் நிறைவான வளர்ச்சியினைத் தஞ்சைப் பெரிய கோயில் கருவறை ஓவியத்தில் காணலாகும்.

5 சோழர்காலக் கற்கலையில் சில இது என்பதை அறிந்துகொள் வதற்கு, முடியின் ஒப்பனையும், முகத்தின் சாயலும் அணிகலன் களின் வேறுபாடும் முதலாவதாக அமையும் அறிகுறிகளாகும்.

6 சிவபெருமானின் திருவருளுக்கு இலக்காகி அவருக்கு உரிய சிறப்புகளை எல்லாம் பெற்றுள்ளவர், சண்டேசுர மூர்த்தியாவர் ஒரு சிவன் கோயில் அமைப்பதென்றால் முதலாவதாக அமைக்கப் பெறும் பகுதி சண்டேசுவரர் கோயிலேயாகும். அத்தகைய சிவத்திருமேனியை மிக அழகிய வடிவில் சிவன் உமையுடன் சிற்பி அமைத்துள்ள அழகினைக் கங்கைகொண்டசோழபுரத்தில் காணலாகும்.

7 அடுத்து, சிவபெருமானின் ஆற்றலைக்காட்டும் தத்துவ உருவங் களில் கரியுரிபோர்த்திய கடவுளின் மூர்த்தமும் ஒன்றாகும். சிற்பி, கருங்கல்லில் கலையை எப்படி நிலைபெறச் செய்துள்ளான் என்பதை சிற்பநுட்பங்களோடு திகழும் இத்திருமேனி நன்கு உணர்த்தும். யானைமுகச் சூரனைக் கொன்று, தோலை உரித்து, பெருமான் போர்வை போலாக்குப்போது அருகிருந்த உமா தேவி அஞ்சிநிற்கும் பாங்கில், உயிர்ப்புடன் சிற்பி, கல்லுக்கும் கலை வழியே உயிர்கொடுத்துள்ள மேன்மையினை கீழைப்பழுவூர், சிதம்பரம் ஆகிய இடங்களில் காணலாகும்.

8 ஆண்டவனின் அமைதியான கோலம் யோக நிலையில், தென் முகக் கடவுளாக அமர்ந்து. சனகாதி முனிவர்கட்குத் தத்துவம் உரைப்பதாகச் சாத்திரங்கள் கூறுவதைச் சிற்பி, தகுந்த முறை யில் உருவாக்கித் தந்த அருமைத் திருமேனியேயாகும். இச் சிற்பத்தில் வேலைபாடுகள் குறைந்தாலும், முகப் பொலிவு யோக நிலைக்குரிய உயிர்ப்புடன் இருப்பதைக் காணலாகும். இத்தகைய சிற்பங்கள் சிறப்புடன் உருவான காலம் பிற்காலச் சோழர் காலமேயாகும். இத்திருமேனியே தவநிலைத் தக்கண மூர்த்தியாகும்,

9 சிற்பி, அரவணைத்துயின்ற பெருமானையும் அழகுடன், வடித்துக் காட்டியுள்ளான். ஆதிசேடன் இட்ட மண்டிலப் படுக்கையில் திருமாள் பெருமிதமான தோற்றமுடன் அரிதுயில் ,கொள்ளும் காட்சி கிடந்த திருமேனியுள்ள அரங்கத்திலும் பிற திருமால் தலங்களிலும் காணலாகும், வடிவழகோடு ஒப்பனைகளும் சிறக்க, சிற்பி அற்புமான திருமேனிகளை உருவாக்கிய காலம் நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலம் எனலாம், நாயக்க மன்னர்களின் சிற்பக்கலைத் திறனுக்கு குடந்தை இராமசாமி கோயில் இலக்காகும். பல்லவர் காலத்திலிருந்தே திருமாலின்

பல்வேறு நிலைக் காட்சிகள் சிற்பக் கலை வழியே சிறப்புடன் வளர்ந்து வந்தன என்பதும் ஈண்டு நினைவுக்கொள்ளத் தகும்.

10 சிற்பி, கல்லில் கலையைக்காட்டும் நிலைக்கு ஒரு மங்கை நல்லாளின் வடிவினை எடுத்துக்காட்டாகத் தரலாகும். முகத்தில் புன்முறுவல், மேனிக்கு இணைந்த அழகு.

11 கல்லில் உயிரூட்டிய மாட்சிமை. "அழகு சுமந்து இளைத்த இடை" என்று புலவர்கள் பெண்மையினைப் புகழுவார்கள். நங்கையின் உடலழகைச் சிற்பியர் அங்க அழகில் ஈடுபட்ட ஆர்வத்துடன் உயிர்ப்புள்ளதாக ஆக்கியுள்ளனர். இடையழகு, மேகலையின் மேன்மை, இவற்றைக் காணும்போது சிலையில் கலை வண்மையைக் காணுகின்றோம். சிவபெருமானைத்
12 "தோடுடைய செவியன்" என்று திருஞானசம்பந்தர் சுட்டினார். உமையொருபாகனாக இறைவன் அமைந்துள்ள அந் நிலையினை சிற்பாசாரியன் கல்லில் உருவாக்கியுள்ளான். வலப் புறம் வடிந்த காது, இடப்புறம் தோடுசேர்ந்த காது. தோடு உமையமைந்த பாகமாகும். இதனைச் சிற்பத்திலும் தத்துவ உருவாகக் காட்டியுள்ள மேன்மையை என்னென்பது?

13 சிற்பத் திறன்களில், "நெளிவழகு" (லாவகம்) என்பது ஒரு திறனாகும். இதனைச் சிற்பி தான் செய்யும் சிலைகளில் நிற்கும் கோல நெளிவு வடிவாக அமைப்பான். இத்தகைய நெளிவுகள் மூன்று திருப்பமான உடல் அமைப்பில் அழகு நிலையுடன் தோன்றுவதை 'திரிபங்கம்' என்று வடவர் சிற்ப நூல்கள் கூறும். அத்தகைய விற்பனமாகிய நுட்பத் திறனை உமையம் மையின் நின்ற திருமேனிகளில் சிற்பி ஆக்கித்தந்துள்ளமையைத் தமிழகமெங்கும் காணலாம்.

முடியிலிருந்து அடிவரையில், உடலமைப்பில் மூன்று திருப்பங்கள் அழகிட்ட நெளிவுடன் இலகுவாக அமைந்துள்ள அழகினை இச்சிலைகளில் காணலாகும்.

14 கந்தருவப் பெண்களைப் பேசும் சிலையாகவே சிற்பியர் கோயில்களில் ஆக்கியுள்ளனர். முகத்தில் புன்சிரிப்பு. தலைமுடி சிகாபந்தமாக முடிக்கப்பட்டு அதில் மலர்களால் ஒப்பனை. கழுத்தில் கண்டிகையுடன் மணிமாலைகள், கையில் அரதனக் கடகம், மார்பில் மணியாலும் முத்தாலுமான நெடுமாலைகள். இடுப்பில் மேகலை. மடிந்து படிந்து ஆடையுடன் நிற்கும் அழகு. உயிர்ப்புடன் விளங்கும் இச்சிலையைச் சிற்பி மனதில் முதலில் ஆக்கிக் கொண்டல்லவா செய்திருப்பான்.

15 மரத்தில் கலைவடிவாகியுள்ள மாண்பினைச் செய்பவர் மரத் தச்சரெனும் சிற்பியராவர். செதுக்கு வேலைகளுள் சிறந்த கைத் திறன், மரத்தால் தேர் செய்வதாகும். சிற்பி தேர் பீடத்தினைச் சித்தரிக்கும் மரவேலை. கலைத்திறனால் உருவாகும் இலைகளே யாகும். அழகிய சிறிய வடிவங்களை மரத்தால் ஆக்கியுள்ள சிற்ப கலைக்கு தமிழகத்திலுள்ள மரத்தேர்களே சான்றாகும்.

16 சிற்பக்கலைக் கோயிலாகத் திகழும் தஞ்சை பெரிய கோயிலின் அற்புத விமானத்தின் அடிப்பகுதியே சிற்பக்கலைக்கோர் இருப் பிடமாகும். தேவகோட்டத்தில், தெளிவாக அமைக்கப் பட்டுள்ள கல்லில் வளர்த்த கலைக்கோர் இலக்கான கங்காதர மூர்த்தியைக் காணுங்கள் என்ன இனிய காட்சி! முடியழகும், இடுப்பின் கொடியழகும், மிடுக்கான மார்பழகும், உயிர்ப்பாக விளங்கும் திருமேனியும், விமானச் சிற்பச் சூழலுக்கிடையே தெய்வ மாடத்தில் காணலாகும்.

17 அச்சத்தைத் தரும் கொற்றவையின் அற்புத வடிவம், உமை யம்மையின் பலவகைச் சக்தி வடிவங்களுள் ஒன்றினைச் சிற்பி உருவாக்கித் தந்துள்ளமையாகும். இத்திருமேனிகளுள் சோழர் குலத் தோன்றல் விசயாலய சோழனால் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் அமைக்கப்பட்ட சிலை சிறப்புடைய தாகும். கோரமான காட்சியாக சிற்பி அமைத்துள்ள இக் கொற்றவையின் தோற்றத்தில் எவ்வளவு வீரம். ஆற்றலுக்கு இலக்காகக் காலடிகளில் அரக்கர்கள், அவர்களை சும்பன். நிசும்பன் என்பர். அவர்களை அழித்து அரசைக் காத்த அன்னை பராசக்தியை ''நிசும்ப சூதனி'' என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறும். அவ்வம்மையின் திருமேனியைக் காண்போ ரின் உள்ளம் தெய்வீகத்தின் மாட்சிமையை அறிவதுடன், கலை வழியே சிலை உருவான மேன்மையினையும் உணர்ந்து மகிழ்வதாகும்.

குற்றியலுகரம்

பேராசிரியர் ச. பாலசுந்தரம் க. பு. கல்லூரி

துணர் 53 மலர் 4. 52 ஆம் பக்கத் தொடர்ச்சி

இனி இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் வரையும் உரையாவது 'வல்லொற்றுத்தொடர்மொழி வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய்வருமிடத்து முற்கூறிய இயற்கை நிற்றலும் உரித்து' என்பதாம்

அஃதாவது இதற்கு மேனின்ற 'அல்லது கிளப்பினும்' என்னும் நூற்பாவிற்கு ஆறீற்றுக் குற்றியலுகரமும் (ஒரு மாத்திரையளவாய்) நிறைந்தே நிற்கும் எனப்பொருள்கூறி நாகுகடிது நாகுகடுமை என எடுத்துக்காட்டுத் தந்து விளக்கினாராதலின், அதனை அடுத்துநிற்கும் இந்நூற்பாவிற்குக் 'கொக்குக்கடிது, கொக்குக்கடுமை'எனவரின் குற்றியலுகரம் முன்னர் முற்றியலுகரமாகி நின்ற நிலைமாறி வன்றொடர்மொழிக்கண் நிற்குங்கால் தன் அரை மாத்திரை இயல்பில் நிற்றலும் உரித்து எனப் பொருள் கூறி உம்மையை விளக்காமல் சென்றார்.

அடுத்து நச்சினார்க்கினியர்

'வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றியலுகரம் வல்லெழுத்து வருமொழி முதலாக வருமிடத்து மொழிமரபில் 'இடைப்படிற்குறுகும்' என்னும் நூற்பாவிற் கூறிய அரைமாத்திரையிலும் குறுகி நிற்கும் என்ற இயல்பிலே நிற்றலும் உரித்து 'உம்மை எதிர்மறை' எனக் கூறிக் 'கொக்குக் கடிது-கொக்குக்கடுமை என்னும் எடுத்துக்காட்டினையே தந்துள்ளார். மேலும் இவர் இளம்பூரணருரையை எடுத்து எழுதி இவ்வாறு கூறுவாருமுளர் என்று சுட்டி அதுபற்றி யாதும் கூறாமற் சென்றார்.

இரெட்டியார் இளம்பூரணரையும் சாத்திரியார் நச்சினார்க்கினியரையும் தழுவி உரை கண்டுள்ளனர். இரெட்டியார் நச்சரைப் பலபடக் கூறி மறுத்துள்ளார். இவர் மறுப்பும் இளம்பூரணர் உரையும் பொருந்தாமையை, அல்லது கிளப்பினும் என்னும் நூற்பாவின் கருத்தை அறிந்த பின்னரே காணக்கூடுமாதலின் அதன் உரையை இனிக் காண்போம்.

அதற்கு முன்பு, குற்றியலுகரப் புணரியல் பற்றிச் சில கருத்துக்களைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்துக்களின் தொகையை முப்பத்துமூன்று என்று வரையறை செய்து (புணரியல் முதல் நூற்பா) அகர முதல் னகரம் இறுவாயன

வற்றைச் சிறப்புடையவை என்றும் குற்றியலிகரம் முதல் மூன்றும் அவற்றோரன்ன என்றும் இவை சார்ந்து வரும் மரபின வாதலின் சார்பெழுத்தென்றும் அறிவியல் நெறிப்படி வகுத்தமைத்துச் சார் பெழுத்துக்கள் வருமிடங்களையும் அவற்றின் இயல்புகளையும் மொழி மரபில் வைத்து விளக்கினர்.

எழுத்ததிகாரத்துள் எழுத்திலக்கணங்களை ஒன்பது இயல்களாக வகுத்துக்கொண்டு கூறும் ஆசிரியர் முதலிரண்டு இயல்களுள் எழுத் துக்களின் தொகை பெயர் அளவு நிலை முதலாயவற்றைக் கூறி மூன்ருவது இயலுள் அவற்றின் பிறப்பமைதிகளைக் கூறினர். மொழி யாகவும் மொழிக்கு உறுப்பாகவும் வரும் இவ்வெழுத்தாலாய மொழி கள் தம்முள் இயைந்து தொகை மொழியாகவும் தொடர் மொழியா கவும் செல்லுங்கால் அத்தனிமொழிகளின் முதலும் ஈறும் (சிறு பான்மை இடையும்) எய்தும் புணர்ச்சி இயல்புகளை ஏனை ஆறு இயல் களான் விளக்குகிருர் (இதனன் புணர்ச்சி இலக்கணங் கூறுவதே எழுத்ததிகாரத்தின் தலையாய நோக்கம் என்பது தெளிவு) மொழி களுள் முதற்கண்ணும் ஈற்றின் கண்ணும் நிற்கும் எழுத்துக்களின் தொகையையும் அவைபெயர்ச் சொல்லும் தொழிற் சொல்லுமாய் நிற்பதையும் இயல்பும் திரிபுமாய் அல்வழியிலும் வேற்றுமையிலும் அவ்வைபுணருவதையும் அவ்வாறு அவை புணருங்கால் சொற் பொருளைத் தெளியவும் கவர் பொருளை விலக்கவும் துணைபுரியும் சாரியைகளையும் சாரியைகளின் இயல்புகளையும் பிறவற்றையும் 'புணரியல்' என்னும் பொதுத் தலைப்பில் விளக்குகிருர்.

பின்னர் உயிரீறும் மெய்யீறுமாகிய சொற்கள் நாற்கணத் தோடும் புணருங்கால் சில பல ஈறுகளுக்கு விதி ஒன்ருக அமைத லின் அவற்றைத் தொகைமரபென்னும் இயலிலும். வேற்றுமை உருபுகள் இடைச்சொற்களாதலின் அவை பெயரொடு (வேற்றுமை விரியாகப்) புணருங்கால் எய்தும் இயல்புகளை உருபியல் என்னும் தலைப்பிலும் விரித்துக் கூறிச் சிறப்புடைய எழுத்துக்களாகிய உயி ரீறும் மெய்யீறும் நாற்கணத்தோடு இருவழியிலும் புணரும் இயல்பு களை உயிர்மயங்கியல். புள்ளி மயங்கியல் என்னும் சிறப்புத் தலைப் புக்களில் வைத்து கூறிச் சார்பெழுத்தாகிய குற்றியலுகரப் புணர்ச்சி யைத் தனியாக இறுதியாகவோரியல் வகுத்துக் கூறியுள்ளார். என்னை?

சார்பெழுத்து மூன்றனுள் குற்றியலிகரமும் ஆய்தமும் மொழிக்கு இடையே வருதலன்றி முதலிலும் இறுதியிலும் வாராமையின் அவற்றை விடுத்து மொழி முதலிலும் ஈற்றிலும் வருதற்குரிய குற்றியலுகரப் புணர்ச்சியை மட்டும் ஏனைய உயிர் எழுத்தும் புள்ளி எழுத்தும் புணரும் இலக்கணங் கூறிய இயல்களுள் கூருமல்

சார்பெழுத்தாகிய அதன் தனித்தன்மை தோன்றத் தனியே ஓரியல் வகுத்துக் கூறுவாராயினர். குற்றியலுகரம் உயிருமாகாது மெய்யு மாகாது அவற்றின் வேறுபட்டு ஒருகால் உயிரியல்பையும் ஒருகால் மெய்யியல்பையும் பெற்று அவற்றைச் சார்ந்து வருதலின் அவ்விரண் டியல்களுக்கும் பின்னர் வைத்துக்கூறினாராவர்.

மற்றும் புணரியலுள் முதலாகவும் ஈறாகவும் நிற்கும் எழுத்துக் களின் தொகை கூறுங்கால் இதனையும் சேர்த்துக்கூறி இதற்குரிய சாரியைத் தொடர்புகளையும் ஆண்டே கூறி உருபியலுள் இஃது உருபேற்குங்கால் எய்தும் முறைகளை கூறியுள்ளவர் இஃது இருவழி யிலும் நின்று புணரும் என்பதை அல்வியல்களுள் கூறினாரில்லை. அதனான் குற்றியலுகரப் புணரியலுள் குற்றியலுகரச் சொற்களை அறுவகையாக பகுத்து அமைத்துக்கொண்டபின்னர் இதுவும் ஏனைய முதலெழுத்துச் சொற்களைப் போல அல்வழி வேற்றுமையாயி இரு வழியிலும் பெயராகவும் வினையாகவும் மூன்று புணருமெனக் கூறியுள்ளார்.

குற்றியலுகரம் உயிரினத்து உகரத்தின் விகாரமன்று என்பதை ஓராமல் உயிர் உகரத்தின் குறுக்கமே இஃது என்று பிறழக்கொண்ட நன்னூலார் உயிரீற்றுப் புணரியலுள் உகார ஈற்றோடுசேர்த்து இதன் புணர்ச்சி விதிகளைக் கூறினாராவர் தொல்காப்பிய உரையாளர் களும் நன்னூலின் தாக்கத்தாலும் ஒலிக்கும் ஒலியனுக்கும் உள்ள வேறுபாடுகளையறியும் வாய்ப்புக் குறையினாலும் குற்றியலுகரத்தின் (சார்பெழுத்துக்களின்) தனித் தன்மை மூற்ற உணராமல் முன்னுக் குப்பின் முரணான கருத்துக்களைக் கூறிச்சென்றனர். இனி நூற் பாசரையைக் காண்போம்,

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும். (குற்-புண-நூ.)

பொருள்:— அல்வழிப்புணர்ச்சியாகக் கூறுமிடத்தும் பெயரும் வினையுமாகிவரும் எல்லாச் சொற்களின் இறுதிக் கண்ணும் (மேல் அறுவகையாக நிகழுமெனப்பெற்ற) குற்றியலுகரம் (வருமொழியோடு புணா) நிற்கும். நிற்கும் என்றது நின்று புணரும் என்றவாறு

எ-டு :- தேசினிது — தேசினிமை, முரசினிது — முரசினிமை, எஃகுயர்ந்தது—எஃகுயர்ச்சி. கச்சினிது — கச்சினிமை. கோங்கினிது — கோங்கினிமை, மார்புயர்ந்தது — மார் புயர்ச்சி. இவை பெயராய் நின்று புணர்ந்தன,

> கூறென்றான், பருகென்றான், அஃகென்றான் (அஃகு—சுருங்கு) நோக்கென்றான் — உண்டென்றான் நல்கென்றான் இவை வினையாய் நின்று புணர்ந்தன.

இவ் ஆறிற்றுச் சொற்களின் முன்னர் உயிர் முதன்மொழியாய் வந்தமையின் திரிபின்றி இவை குற்றியலுகரங்களே என உணர்த்தின அன்றி, தேசு பெரிது — தேசு பெருமை என்றாற் போல பிறகணங்கள் வருமொழியாகிவரின் நிலைமொழியீறு இருவகை உகரங்களுக்கும் பொதுவாதலின் குற்றியலுகரமே எனக் காட்ட அவ்வுகரத்தின்மேல் தேசு பெரிது, தேசு பெருமை எனப் புள்ளியிட்டெழுதுதல் வேண்டும்.

[குற்றியலுகரத்தின் மேல் புள்ளியிடும்மரபைக் கைவிட்டமையாற்றான் இதன் இலக்கணம் பற்றிய நுண்மைகள் பலவற்றை அறிய இயலாதுள்ளோம்.]

எல்லாம் என்றது : பெயரும் தொழிலுமாகிய சொற்களை
நிலையும் என்றது : வருமொழியை நோக்கிப் புணர நிற்கும் என்றவாறு.

விளக்கம் :— இவ் அறுவகை மொழிகளும் முற்றுகரத்தை ஏற்று நிற்கவும் உரிமையுடையவை யாதலின் இருவகை வழக்கிலும் நெட்டெழுத்தின் பின்னரும் தொடர்மொழி இறுதிக்கண்ணும் வல்லெழுத்தை ஊர்ந்து நிற்கும் உகரங்கள் செய்யுளின்கண் வருமொழி உயிர்முதன் மொழியாக வந்து புணருமிடத்தன்றி ஏனைக்கணங்கள் வந்து புணரின் நிலைமொழிகள் இயற்சீராகவும் ஆசிரிய உரிச்சீராகவும் வெண்சீராகவும் நின்று தளைத்தலின் அவை பெரும்பான்மையும் முற்றுகரங்களேயாகும். அதனான் புணர்மொழியிடத்து யாண்டும் முற்றுகரம் மட்டுந்தான் வருமோ ! என்ற ஐயம் நிகழாவாறு இருவழியினும் புணர்மொழியிடத்துக் குற்றுகரமும் வரும் என்றும் நிலைமொழி வஞ்சியுரிச்சீராக நின்று தளைக்குமிடத்துப் பெரும்பான்மையும் குற்றியலுகரந்தான் வருமென்றும், கட்டளையடிக்கண்வரின் அது குற்றுகரமே என்றும் அறிவித்தல் இந்நூற்பாவின் பயனாகும்.

இனி இக்குற்றியலுகரம் புணரியலுள் மொழி முதல் மொழியீறு எழுத்துக்களை எண்ணிய நூற்பாவிற் சேர்த்து எண்ணித் தொகை கூறப்பெற்றுள்ளமையால் அவ்வியல் பத்தாம் நூற்பா வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும் எழுத்தே சாரியை ஆயிருபண்பின். ஒழுக்கல் வலியபுணருங் காலை. எனக் கூறுதலின் இக்குற்றியலுகரமும் இருவழியிலும்புணரும் என்பது பெறப்படாதோ எனின் ? பெறப்படாது. என்னை ? ஆண்டு

நிறுத்த சொல்லையும் குறித்து வருகினவியையும் பற்றிக் கூறுங்கால் ''உயிரீறுசொல்முன் உயிர்வருவழியும் எனத் தொடங்கும் நூற்பா வில் உயிர், மெய் என விதந்ததமையால் சார்பெழுத்தாகிய இக்குற்றி யலுகரம் ஆண்டு அடங்காதெனக.

மற்று ''மெய்யீரெல்லாம் புள்ளியொடுநிலையல்''
''குற்றியலுகரமும் அற்றென மொழிப''

என்பதனால் குற்றியலுகரத்தை மெய்யாகக் கொண்டு அதனுள் அடக்கலாமெனின். ஆண்டு ஆசிரியர் புள்ளிபெறும் ஓரியல்பை மாட்டெறிந்தார் ஆதலின் இதனை மெய்யெழுத்தியற்று எனக் கூறினாரில்லை. எனவே ஈண்டு அஃது இருவழியும் நின்று புணரும் எனத் தெளிவுறுத்தினார் என்க.

இனி உரையாளர் தம் கருத்துக்களையும் அவை பொருந்தாமை யையும் பற்றிக் காண்போம்.

இளம்பூரணர் இந்நூற்பாவில் 'நிலையும்' எனநிற்கும் பாடத்தை நிறையும் எனக்கொண்டு, இருவகைப் புணர்ச்சியிலும் ஆறீற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும் எனப்பொருள் கூறினார். அஃதாவது இவ் அறுவகைக் குற்றியலுகரங்களும் ஒருமொழியாய்த் தனித்து வரும் கால் மட்டும் அரை மாத்திரையளவாய் நிற்கும் என்பதும் புணர்மொழியிடத்து ஒரு மாத்திரையளவாய் நிறைந்து நிற்கும் என்பதும் அவர் கருத்து எனத் தெரிகிறது.

ஆசிரியர் தொல்காப்பியர் குற்றியலுகரத்திற்கு அளவு அரை மாத்திரையே என வரைந்துள்ளார் அதனை மறந்து புணர்மொழியுள் அஃது ஒரு மாத்திரையாகும் எனின் அது முரண்பாடாகும். குற்றிய லுகரம் ஒரே வழி நீண்டிசைக்குமென்றோ அல்லது அளபெடுக்கு மென்றோ ஆசிரியர் யாண்டும் கூறினாரில்லை. மற்றும் ஒரு மாத்திரை யளவினதான உகரமொன்று உயிரினத்துள் இருக்கும்போது இக் குற்றியலுகரமே புணர் மொழியிடத்து ஒரு மாத்திரையாக நீளும் எனக் கூறல் மயங்கவைத்தலாகும். அரைப்படியளவினதாக வரையறுக்கப்பெற்றதொரு முகத்தலளவை நீரை முகக்கும் போது அரைப்படியளவா முகக்கும் என்றும் பாலை முகக்கும் போது ஒருபடி யளவாக நிறைந்து விடும் என்று கூறுவது போன்றுளது இது.

ஒரு மாத்திரையளவாய் நிற்கும் என்பதே ஆசிரியர் கருத்தா யின் தனிமொழியில் மட்டும் குற்றியலுகரம் வரும் புணர் மொழி யிடத்து வாராது முற்றுகரமே வரும் எனத் தெளிவாகக் கூறியிருப் பார். வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழி

மட்டும் குற்றுகரம் வரும் எனச் சுருங்க கூறியிருப்பார். புணர் மொழியிடத்து ஒரு மாத்திரையாகி நிறையும் என்ற அளவிலே கூறி னுற் சாலும் அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் என்பது வேண்டா கூறலாய் முடியும். அன்றியும் இவ் ஆறீற்று உகரமும் வருமொழி உயிர் முதன் மொழியாய் அவ் உயிரே இடங்கொடாமல் வருமிடத்து உடம்படுமெய் பெற்றுப் புணர்தல் வேண்டும். அஃதாவது நாகு + அரிது நாகுவரிது எனப்புணர்தல் வேண்டும், நாகரிது என்ப் புணருமாயின் வருமொழியில் உயிர்க்கணமல்லாத ஏனைக் கணங்கள் வருங்கால் மட்டுமே நிறைந்து நிற்கும் எனக் கொள்ள வேண்டும் அவ்வாறு கொள்ள நூற்பா இடந்தரவில்லை.

இம்மயக்கங்களுக் கெல்லாம் அடிப்படைக் காரணம் நெடிலுக்கு ப்பின்னும் தொடர்மொழியின் இறுதியிலும் வல்லெழுத்தை உணர்ந் துநிற்கும் உகரம் யாவும் குற்றியலுகரமே எனக் கொண்டமையும் குற்றியலுகரம் உயிருமாகாத மெய்யுமாகாத தனித் தன்மையுடைய சார்பெழுத்தென்பதை மறந்து உயிரினத்து உகரத்தின் விகாரமாக கொண்டமையுமேயாம், இதனை இவர் நூன்மரபின் இரண்டாம் நூற்பா உரையுள் "சந்தனக்கோல் குறுகின விடத்துப் பிரப்பங்கோல் ஆகாது" அதுபோல இகர உகரங்கள் குறுகிய விடத்தும் அவை உயிர் ஆகற்பாலன அவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் நோக்கி வேறெழுந்தென வேண்டினர் என உணர்க என எழுதியிருப்பதனுல் தெளியலாம் அதனுல் முதற்கோணல் முற்றுங்கோணலாக நிகழ்வதில் வியப்பொன்றுமில்லை;

இவ்வுரையாசிரியர்களின் பிறழ்வுணர்ச்சியால் தமிழ் மொழியின் செம்மையும் நுண்மையும் கார்சூழ்ந்த கதிரைப் போல அதன் உருவும் ஒளியும் பிற்காலத்தார்க்குப் புலப்படாவாயின என்பதை கருதும் போது வருந்தாமலிருக்க இயலுமோ ? இது நிற்க.

சார்பெழுத்துக்களின் சிறப்பியல்புகளை ஓரளவு உணர்ந்து கூறிய இரெட்டியார் அவர்களும் முக்குணவயத்தான் மயங்கி இந் நூற்பாவிற்கு இளம் பூரணர் கொண்ட நிறையும் என்ற பாடத்தையும் அவர் உரையையும் போற்றிக்கொண்டு ஓரளவு செவ்வுரை பகர்ந்த நச்சினார்க்கினியரை அவர் உரைக் கருத்தை ஓர்ந்தறியாமல் தமக் குத் தோன்றியவாறு மறுத்துரை கூறியுள்ளார்.

(தொடரும்)

இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையாவது :

'இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே (எழுத் — 37)

என்றதனான் புணர்மொழிக்கண் தன் அரை மாத்திரையினும் குறுகும் என்றெய்தியதனை விலக்கி அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே (எழு — 12) என்ற விதியே பெறுமென்கிறது' என முன்னுரை கூறி

இருவழியும் ஆறீற்றின்கண்ணும் உகரம் தன் அரை மாத்திரையைப் பெற்றுநிற்கும். அன்றி இருமொழிப் புணர்ச்சிக்கண் ஒரு மாத்திரை பெறுமென்றார்க்குப் பன்மொழிப் புணர்ச்சியாய செய்யுளிலக்கணம் குற்றுகரத்தான் நேர்பசை நிரையசை கோடலும் அவற்றான் அறுபது வஞ்சிச்சீர் கோடலும், பத்தொன்பதினாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொரு தொடை கோடலும் இன்றாய் (யாவற்றையும்) முற்றியலுகரமாகவே கொள்ள வேண்டுதலின் மாறு கொளக் கூறல் என்னும் குற்றந்தங்கு மென்றுணர்க' எனக்கூறி உரையாசிரியரை மறுத்துள்ளார். மேலும் இனி இது ' மால்யாறு போந்து— கால் சுரந்து பாய்ந்து'' எனத் தொடர்மொழிக்கண் அரைமாத்திரை பெற்றதென்றாக்கால் வஞ்சிச்சீர் இன்றாமாறு உணர்க'' என்றும் கூறி உரையாசிரியரை மறுத்துள்ளார்.

நச்சினார்க்கினியரின் நேர்மையான உரைவிளக்கத்தை வேங்கடராசலு ரெட்டியாரவர்கள் கீழ்க்கண்டவாறு மறுக்கிறார்.

இருவகை உகரமோடியைந்தவை வரினே
நேர்பும் நிரையும் ஆகும் என்ப. (செய் — 4)

என்று கூறியிருத்தலின் முற்றுகரத்தானும் நேர்பசை நிரையசையமையுமே; நாகு — வரகு என்னும் குற்றியலுகர வீற்றுச் சொற்களும் நேர்பு நிரைபு அசைகளே. நாணு வளைவு என்னும் முற்றுகர வீற்றுச் சொற்களும் நேர்பு நிரைபு அசைகளே. வஞ்சிச்சீர் அறுபதும் நேர் நிரை நேர்பு நிரைபு என்னும் அசைகளின் மயக்கத்தால் ஆவனவேயல்லாமல் குற்றுகரவீற்று நேர்பு நிரைபு அசைகளானே அமைதல் வேண்டும் என்னும் நியதியில்லையே; இவற்றால் அறுபது வஞ்சியுரிச்சீர் கோடல் இன்று என நச்சர் மறுத்துரைத்தது பொருந்துவதன்று'' என்பது ரெட்டியாரின் இம்மறுப்புரை, நச்சினார்க்கினியருக்குப் புரியாத ஒன்றைப் புரியவைப்பது போல எள்ளல் முறையில் அமைந்திருத்தலைக் காணலாம்.

முற்றுகரத்தால் நேர்பசை நிரைபசை கோடலை நச்சர் மறந்து விடவில்லை. புணர்மொழிக்கண் உகரம் யாவும் முற்றியே நிற்குமெனின்

இருவகை உகரமோடியைந்தவை வரினே எனக் கூறியது மாறுகொளக் கூறலாகும் என்பது அவர்கருத்து. அற்றன்று தனிமொழிக்கண்ணும் செய்யுளின் ஈற்றின்கண்ணும் வரும் குற்றியலுகரச் சொற்களைக் கருதி ஆசிரியர் அவ்வாறு கூறியுள்ளார் எனக் கொள்ளலாமே எனின்

'மால்யாறு போந்து கால்சுரந்து பாய்ந்து' என்று வரும் வஞ்சியடிகளுள் வரும் உகரங்கள் யாவும் முற்றுகரமாய் ஐந்தெழுத்துச் சீரும் ஆறெழுத்துச் சீருமாய் எண்ணப்பெற்றுத் .

'தன் சீரெழுத்தின் சின்மை மூன்றே'' (செய் — 45) என்பதனோடு மாறுகொள்ளுதலின் உரையாசிரியர் உரையே ஆசிரியர் கருத்தாயின் மாறுகொளக் கூறல் என்னும் குற்றமாம் என்றார் நச்சினார்க்கினியர். இஃதோன்றலையும் ஓராது ரெட்டியார் உரை விதண்டையாக உள்ளமை புலனும்.

மேலும் ரெட்டியார் அவர்கள் தாம் கொண்ட பாடத்திற்கும் உரைக்கும் அரணாகப் பேராசிரியரின் செய்யுளியலுரைப் பகுதிகளை மேற்கோளாகக் காட்டுகின்றார் அவையாவன :—

''மாவருவாய் - புலிவருவாய், என்பவற்றையும் ஞாயிறுகொல் வலியதுகொல் எனக் குற்றுகரம் பெய்து இருநிலைமைகொள்ளாமோ எனின்; கொள்ளாம் அவை ''எல்லா இறுதியும் உகரம் நிறையும்'' என்பதனான் முற்றுகரமேயாம்.'' (செய் — நூ — 43 உரை)

குற்றுகரங்கள் நிலைமொழி ஒற்றுடையவாயின் நேர்பும் நிரைபும் ஆகா வருமொழி வல்லெழுத்து மிகினே ஆவது என்றவாறு. அஃதென்னை பெறுமாறெனின் 'வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுந்து வருவழி' என்றதனான் முன்னர் நிலைமொழித் தொழிலாகிய முற்றுகரம் வருமெனக் கூறிய அதிகாரத்தானே ஒற்றுத் தோன்றின் என்றானுகலானும் பெறுதும் என்பது (செய் — நூல் — 10 உரை)

இவற்றை எடுத்துக்காட்டி அறுவகைக் குற்றுகரமும் புணர்மொழிக்கண் ஒரு மாத்திரையளவில் ஒலிக்கும் என்பதனால் அவை முற்றுகரமேயாகும் என்பது பேராசிரியர் கருத்து என்று எழுதியுள்ளார் இரெட்டியார்.

இனி, பேராசிரியர் செய்யுட்கண் பாவென்னும் ஓசை கருதியும் சீர்நிலை கருதியும் உயிரும், ஒற்றும் மிக்கு நீண்டிசைத்தல் போல (எழு — சூ 33) இக்குற்றியலுகரமும் செய்யுட்கண் மிக்கிசைக்குமாதலின் அவ்விலக்கணம் பெறுதற் பொருட்டு ''அல்லது கிளப்

பினும்'' என்னும் நூற்பா இறுதி ''நிறையும்'' என்றிருப்பதே உண்மைப்பாடமென்று கருதியுள்ளார். எனினும் புணர்மொழி யிடையே வரும் ஆறீற்றுக் குற்றுகரங்களும் நிறைந்தே நிற்கும் எனக்கொண்டாரல்லர். உயிர் முதல்மொழி வருமொழியாகி வாராமல் ஏனைக்கணங்கள் வருங்கால் நிலைமொழியிறுதியில் வல் லெழுத்துக்களை ஊர்ந்துவரும் உகரம் சீர்வகையடியாயின் முற்றுகரம் என்பது அதனான் அஃது அலகுபெற்றுச் சீர்நிறைக்கும் என்பதும், கட்டளைவகையடியாயின் குற்றுகரம் என்றும் அதனான் அஃது ஒற்றியல்பினதாய் அலகுபெறாது சார்ந்து நின்று ஓசையை நிறைக்கும் என்பதும் பேராசிரியர் கருத்தென்பது. அவர் உரையை ஆழ்ந்து நோக்கின் புலனாம். என்னை ?

''குற்றுகரம் ஒற்றுப் போன்று ஒடுங்கி நில்லாது என்னை; தன்னான் உரைப்பட்ட ஒற்றுந்தானுமாகி அரைமாத்திரைத்தாகி யும் ஒடுங்கியிசையாது அகன்று இசைக்கும், அதனான் ஒற்றென்றலு மாகாது பின்னும் ஒரு மாத்திரைத் தாகாமையின் குற்றெழுத் தெனலுமாகாது மற்று அதனான் அதனை ஒற்றென அடக்கார் குற்றெழுத்தென ஏற்று அலகுகொள்ளார் இனி அதனைச் செயற் பாலது ஓர் அசையாக்குதல் நோக்கி நேர்பசை நிரைபசை என வேண்டினான் என்பது ... ... ஞாயிறு, வலியது என்றவழிக் குறிலிணையுகரமெனக் குற்றெழுத்தாக்குவது எற்றுக் கெனின் அளபெடையை ஓசையிற் சிதையாது நிலப்படையுள் அலகு சிதைத்தாற்போல; அலகுபெறுமென்பது, இலக்கணமில்லதோர் வழுவமைதிதானுயதனை இலக்கணமாக ஒத்துக்கொண்டு இலக்கண வகையாற் குற்றுகரமாதலை விலக்குவாரும் உளரோ (செய் - நூ - 4 பேராசிரியர் உரை) என்றும்,

ஞாயிறு, வலியது — என ஓர் அசைப் பின்னர் வந்தவழிக் குற்றுகரமேயாமன்றே ? ஆண்டும் அது குறிலிணையுகரமெனவே படுமென்பது. பட்டக்கண்ணும் குற்றுகரமேயெனவழுவமைத்தவாறு குறிலிணை எனக் குற்றுகரத்தையும் உடம்பொடு புணர்த்தல் என்பத னான் குற்றெழுத்தெனவேண்டினான் என்பது பெற்றாம். இங்ஙனம் குற்றுகரங் குறிலிணையாகியும் குற்றுகரமாகி எழுத்தளவெஞ்சினும் அமையுமெனவே நுந்தை என்னும் முதற்கட் குற்றுகரமும் குற்றெ ழுத்துப்போன்று அலகுபெறும் எழுத்தளவெஞ்சினும் என்பது கொள்க. (செய் - நூ - 5 பேராசிரியர் உரை) என்றும்; பிறண்டும் இவர் கூறுமாற்றால் குற்றியலுகரம் பற்றிய இவர்தம் கருத்துத் தென்றெனப் புலனாம்.

அடுத்து, குற்றியலுகரமும் முற்றியலுகரமும்
ஒற்றொடுதோன்றி நிற்கவும் பெறுமே

என்னும் செய்யுளியல் பத்தாம் நூற்பா உரையுள் முன்னர் நிலை மொழித் தொழிலாகிய முற்றுகரம் வருமென்னும் அதிகாரத்தானே என்னும், தொடர் "அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லா இறுதியும் உகரம் நிறையும்" என்னும் நூற்பாவைச் சுட்டுவதாகக் கருதி ரெட்டியார் தன் கருத்துக்குச் சான்றாகக் காட்டி னார். இத்தொடர் அந்நூற்பாவைச் சுட்டாது. ஏன்? அந்நூற்பா நிலைமொழித் தொழிலாகிய புணர்ச்சி விதி கூறும் செய்கை நூற்பா வன்று என்பது வெளிப்படை. பேராசிரியர் முற்றுகரம் நிலைமொழித் தொழிலாக வரும் என்று கூறுவதற்கு அதில் இடமில்லை. பின்னர் அத்தொடர் நூற்பாவைச் சுட்டுகிறதெனின் "முற்றியலுகரமும் மொழி சிதைத்துக் கொளா அ" என முன்னின்ற செய்யுளியல் ஒன்பதாம் நூற்பாவைச் சுட்டுகின்றதென்பதையும் "வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழி" என்னும் மேற்கோள் இருவகை உகரமும் ஒற்றேடு தோன்றல் என்பது வருமொழித் தொழிலால் தோன்றும் ஒற்று என்பதை உணர்த்துதற்கென்பதை யும், அவ்வுரையை நன்கு நோக்கின் புலனும்.

இதுபற்றிப் பேராசிரியர் உரைக்குக் குறிப்பு எழுதிய சி. கணே சையர் அவர்கள் "என்றதனுன் என்பது என்றதனுனும் என்றிருத் தல் வேண்டும். முன்னர் என்றது 9-ஆம் சூத்திரத்தை அதனுள் ஈற்றுகரம் பற்றி ஒற்றுத் தோன்றும் என்பது உய்த்துணரப்பட்டது. அதனை உணர்த்தற்கே பின்வாக்கியம் எழுந்தது" என பத்தாம் நூற்பாவின் அடிக் குறிப்பில் வரைந்திருப்பதும் இதனை மேலும் தெளிவுபடுத்தும் என்க.

மேற்கூறியவாற்ருல் பேராசிரியர் "நிறையும்" எனப்பாடங் கொண்டனராயினும் புணர்மொழியிடத்து ஆறீற்றுக் குற்றுகரங் களும் ஒருமாத்திரைப்பெற்று நிறைந்து முற்றியலுகரமாகும் என்னும் கருத்தினரல்லர் என்பதும் புணர்மொழியிடைவருவன குற்றுகரமும் முற்றுகரமும் சீர்முறைக்கு ஏற்பவரும் என்பதும் அவர் கருத்தாதல் புலனும்.

ஆக, "வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழி தொல்லையியற்கை நிலையலும் உரித்தே" என்பதற்கு நச்சினர் கூறிய உரையே ஆசிரியர் கருத்திற்கியைந்ததென்பதும் தெளிவாம்.

[தொடரும்]